1996 பிப்ரவரி 28]

147—

வாடகைக் கார்களுக்கு கட்டணம் விதித்தல்

23107—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் :

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆந்திராவில் பதிவு செய்யப்பட்ட வாடகைக் கார்கள் தமிழகம் வரும்போது கட்டணம் விதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆந்திர மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட வாடகைக் கார்கள் தமிழகம் வரும்போது 1988-ஆம் வருட மோட்டார் வாகனச் சட்டம் 88(8)-ன்படி, கட்டணம் மற்றும் உரிய வரி வசூலித்து, தமிழகத்தில் இயக்க அனுமதிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருந்து வாடகைக்கார்கள் ஆந்திராவிலுள்ள திருப்பதி போன்ற இடங்களுக்கு சென்றால், வாடகைக்கார்களின் உரிமையாளர்கள் பெர்மிட் வாங்க வேண்டுமென்று ஒரு தொகையை கேட்கிறார்கள். அதேபோல் ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டுக்கு வரும் கார்களைப் பொறுத்தவரையிலும்கூட அமைச்சர் அவர்கள் வசூல் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். அது எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு வித்தியாசம் இதில் இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு லைட் வெகிக்கிள் என்று சொன்னால், எவ்வளவு வரி போட வேண்டுமென்ற முறை இருக்கிறது. இது டெம்பரரி பெர்மிட். தமிழகத்தில் இருந்து திருப்பதிக்கு செல்வதற்கோ அல்லது ஆந்திராவுக்கு செல்வதற்கோ தற்காலிக பெர்மிட் நாங்கள் வழங்குகிறோம். அதற்குரிய தொகையை மட்டும் செலுத்தினால் போதும்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திராவில் இருந்து சென்ற ஆண்டில் பதிவு செய்யப்படாத வாடகைக்காரர்கள் தமிழகத்திற்கு வந்தபோது எத்தனைக் கார்கள் பிடிபட்டன ? இதனால் அரசுக்கு என்ன வருமானம் கிடைத்துள்ளது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகை வாகனங்களுக்கு கட்டணம் வசூலிப்பதாக அமைச்சர் இங்கே சொன்னார். கல்வி நிறுவனங்கள் வாடகை வாகனங்களை அமர்த்திக்கொண்டு மற்ற மாநிலங்களுக்குச் செல்லும்போது கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அப்படி கட்டணம் வசூலிப்பதை அரசு ரத்து செய்ய ஆவன செய்யுமா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி நிறுவனங்கள் வைத்திருக்கிற அந்தப் பேருந்துகளுக்கு உரியக் கட்டணத்தை வசூல் செய்து தான் அங்கே மாணவர்களுக்கும் அந்தப் பேருந்துகளை இயக்கிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அதுபற்றி இப்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு.எஸ்.அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம், குறிப்பாக ஆந்திர மாநிலம், திருப்பதி கோயிலுக்கு செல்லும்போது பாஸை காண்பித்தால்கூட அந்த வாடகைக்காருக்கு கட்டணம் வசூல் செய்கிறார்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் ஆக்குவதே நம்முடைய கையிலே இருக்கின்ற காரணத்தினாலே நாமும் வரி செலுத்தித்தான் செல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 148, திருமதி அ.தி.சரஸ்வதி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

148—

மான்கள் சரணாலயம் அமைத்தல்

***36246—திருமதி அ.தி. சரஸ்வதி :**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—